02.02.2017

தினமணி

**ராஜபாளையம் பகுதிகளில் நீரின்றி முதல் போக நெல் சாகுபடி பாதிப்பு**



ராஜபாளையம் பகுதிகளில் நீரின்றி முதல் போக நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாயிகள் முதல் போக நெல் சாகுபடியை மேற்கொண்டுள்ள நிலையில், குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. கிணறு வைத்திருப்பவர்கள் மட்டும் இருக்கும் குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி பயிர்களை பராமரித்து வருகின்றனர். கிணறு வசதி இல்லாத விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சுகின்றனர்.

கடந்த ஆண்டு பெய்த பருவ மழை போல் இந்த ஆண்டும்

மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

ஆனால் போதிய அளவு மழை பெய்யவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பெய்து குளங்களுக்கு தண்ணீர் வரும் பட்சத்தில் விவசாயப் பணிகள் தீவிரமடையும். தற்போது கிணற்று பாசன விவசாயிகள் செய்துள்ள முதல் போக சாகுபடி பயிர்கள் கருது விடும் நிலைக்கு வளர்த்துள்ளன.

இவற்றுக்கு இன்னும் 2 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டும் நல்ல மழை பெய்தால் நெல் சாகுபடி சிறப்பாக அமையும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
அதே சமயத்தில் தேவதானம் சாஸ்தா கோவில் நீர்தேக்கம் நிரம்பியதால் இப்பகுதியில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு கை கொடுத்துள்ளது.

ராஜபாளையம், தேவதானம், சேத்தூர் பகுதிகளில் முன்பட்டத்தில் நடவு செய்த நெல் பயிர்கள் விளைந்து அறுவடையாகி வருகின்றன.

**ரூ.10 லட்சம் கோடி வேளாண் கடன் இலக்கு: பட்ஜெட்டில் அறிவிப்பு**



அடுத்த நிதியாண்டில் (2017-18) அளிக்க வேண்டிய வேளாண் கடன்களுக்கான இலக்கை 11 சதவீதமாக மத்திய அரசு அதிகரித்துள்ளது. அதன்படி ரூ.10 லட்சம் கோடி மதிப்பிலான வேளாண் கடன்கள் அளிக்கப்படும்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி புதன்கிழமை தாக்கல் செய்த பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது:

அடுத்த நிதியாண்டில் வேளாண் அமைச்சகத்துக்கான நிதி ஒதுக்கீடு 6 சதவீதம் அதிகரிக்கப்படுகிறது. அதன்படி அந்தத் துறைக்கு ரூ.51,026 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த நிதியாண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.48,072 கோடியாக இருந்தது. வேளாண் மற்றும் அதுசார்ந்த துறைகளுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ரூ.58,663 கோடியாகும். புதிய திட்டமான பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 40 சதவீத விளைநிலங்களைக் கொண்டுவர இலக்கு நிர்ணயித்துள்ளோம். இத்திட்டத்துக்காக ரூ.9,000 கோடியை ஒதுக்குகிறோம்.

நல்ல பயிர்களுக்கு போதுமான கடன்கள் உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். எனவே வரும் நிதியாண்டில் அளிக்க வேண்டிய வேளாண் கடன்களுக்கு சாதனை அளவாக ரூ.10 லட்சம் கோடியை இலக்காக நிர்ணயித்துள்ளோம். இது நடப்பு நிதியாண்டில் ரூ.9 லட்சம் கோடியாக இருந்தது. விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய வட்டி விகிதங்களின் கீழ் ரூ.15,000 கோடியை குறுகிய காலக் கடன்களாக அளிக்க அரசு ஒதுக்கியுள்ளது.

அதேபோல் வேளாண் துறையில் போதிய கவனம் பெறாத வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீர்

ஆகியவற்றுக்கு போதுமான கடன் வசதிகள் கிடைக்க அரசு பிரத்யேக முயற்சிகளை மேற்கொள்ளும். விவசாயிகள் குறைந்தபட்ச அளவான 7 சதவீத வட்டியுடன் கூடிய குறுகிய காலக் கடன்களாக ரூ.3 லட்சம் வரை பெற்று வருகின்றனர். கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதன் மூலம் அவர்களுக்கு மேலும் கூடுதலாக 3 சதவீத தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது. இதனால் மொத்தமே 4 சதவீத வட்டிதான் வசூலிக்கப்படுகிறது. வேளாண் துறையில் சிறப்பான முறையில் தண்ணீர் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், நபார்டு வங்கியில் நீண்ட கால நீர்ப்பாசன நிதித்தொகுப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.40,000 கோடியாக அண்மையில் உயர்த்தப்பட்டது. அதேபோல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நபார்டு வங்கியில் முதற்கட்டமாக ரூ.5,000 கோடி மதிப்பில் மற்றொரு நிதித்தொகுப்பு உருவாக்கப்படும். மேலும், அடுத்த மூன்று ஆண்டுகளில் பால் பதப்படுத்துதல் துறை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்தொகுப்பு ரூ.8,000 கோடி மதிப்பில் அமைக்கப்படும். முதற்கட்டமாக இதற்கு ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கப்படும் என்று அருண் ஜேட்லி குறிப்பிட்டார்.